# தமிழ் நாடு சட்டப் பேரவை.

## திங்கட்கிழமை, 1970 செப்டம்பர் 7.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர், புலவர் கா. கோவிந்தன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

### 1. வினுக்கள்--விடைகள்.

### வெள்ளிக்குறியிட்ட வினுக்கள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** வினுக்கள் 259, 260, 261, 262 பிறகு எடுத்துக் கொள்ளப்படும்.

### உருக்கு நோய் மருத்துவமனை, பெருந்துறை

*263 வினு—**திரு. சு. துரைசாமி :** மாண்புமிகு கல்வி, சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெருந்துறை T. B. சானிடோரியத்திற்கு ஆண்டுதோறும் அரசு தரும் உதவித்தொகை எவ்வளவு?

(இ) அத்தொகையை அதிகரிக்கும் உத்தேசம் உண்டா?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** (அ) ரூ. 1,00,000.

(இ) இதற்கான கோரிக்கை பரிசிலனையில் இருக்கிறது.

**திரு. சு. துரைசாமி :** தலைவர் அவர்களே, பெருந்துறை மருத்துவ மனையில் இன்னும் அதிகப்படியான படுக்கைகள் அமைக்கப்படுமானுல் மிகவும் நலமாயிருக்கும். கோவை மாவட்டத்தில் டி.பி. நோய்க்கான மருத்துவ மனைகள் அரசாங்கத்துறையில் இல்லை. ஆகவே, அங்கு அதிகப்படியான படுக்கைகளை வைக்க அவர்கள் முன்வருவார்களா? அதற்கான உதவியை அரசாங்கம் தருவார்களா?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** 1960-க்கு முன்னுல் ரூ. 43,000 மானியம் வழங்கப்பட்டது. 60-ல் ரூ. 74,000 வழங்கப்பட்டது. 65-ல் ஒரு லட்சம் ரூபாய் வழங்கப்பட்டது. அதை இரண்டு லட்சமாக ஆக்கவேண்டுமென்று அவர்கள் கேட்டுக்கொண்டிருக்கிருர்கள். இப்போது அங்கு 380 படுக்கைகள் இருக்கின்றன. அதில் இலவசமாகக் கொடுக்கக்கூடிய படுக்கைகள் 130, அந்த அளவிற்கு அனுமதி கொடுக்கப்படுகிறது. இரண்டு லட்சம் ரூபாய் தந்தால் அந்த 130 என்பதை 150 ஆக உயர்த்தமுடியும் என்று அவர்கள் கேட்டுக்கொண்டிருக்கிருர்கள். அவர்களுக்கு துண்டு விழுவது ரூ. 1,75,000 என்று அவர்கள் கணக்கு சொல்கிருர்கள். அவற்றையெல்லாம் அரசாங்கம் கேட்டிருக்கிறது. அந்தக் கணக்குகள் வந்த பிறகு அவற்றைப் பரிசீலித்த பிறகு தக்க முடிவு எடுக்க வேண்டிவரும். பிறகுதான் படுக்கைகளை உயர்த்துவது பற்றி எண்ண வேண்டியிருக்கும்.

திருமதி கே. பி. ஜானகியம்மாள்: தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் இந்த காச நோயால் பலர் பாதிக்கப்பட்டு அந்த நோயாளிகள் இடம் கிடைக்காமல் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். ஆகவே, இந்த பெருந்துறை டி.பி. ஸானிட்டோரியத்தை அரசாங்கமே ஏற்று நடத்துவது உதவிகரமாகயிருக்கும் என்று அரசாங்கம் கருதுகிறதா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: அது நடந்து வருகிற முறையில் ஒன்றும் கேடு இல்லை. நல்ல முறையில்தான் அந்த ஸானிட்டோரியத்தை நடத்திக்கொண்டு வருகிறார்கள். அதிகமாகச் செலவாகிறது, துண்டு விழுகிறது என்ற காரணத்தினால் அரசாங்கம் கூடுதல் மானியம் தரவேண்டுமென்று கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். இரண்டு லட்சம் ரூபாய் மானியம் தருகிறபோது அவ்வகையில் கொஞ்சம் படுக்கைகளைக்கூட்ட முடியும் என்ற கருத்தையும் தெரிவித்திருக்கிறார்கள். அதுதான் அரசாங்கத்தின் பரிசீலனையில் இருந்து வருகிறது.

திரு. சு. துரைசாமி: இலவசப் படுக்கைகள் அதிகமாக வேண்டுமென்று விண்ணப்பித்துக்கொண்டு ஒரு ஆண்டு இரண்டு ஆண்டுகளுக்கு மேல் ஆகிறது. வியாதி கடுமையாக இருக்கிறவர்களுக்கு உடனடியாகப் படுக்கைகள் கொடுப்பதற்காக சிறிது அதிகம் படுக்கைகளை உயர்த்தவேண்டுமென்று அரசாங்கம் அவர்களுக்கு ஆலோசனை கூறுமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: காச நோயைப் பொறுத்த வரையில் வீட்டிலிருந்தே பார்த்துக் கொள்வதற்கு ஏற்ற முறையில் பலவித மருந்துகள், மற்ற வகைகளை எல்லாம் இப்பொழுது கண்டுபிடித்திருக்கிறார்கள். மிகக் கடுமையான அளவிற்குள்ள நோயாளிகளைத்தான் ஆஸ்பத்திரிகளில் வைத்துக் கவனிக்க வேண்டிய முறை உள்ளது. நிதி வசதிக்கேற்ற முறையில்தான் படுக்கைகளை கூட்டி வருகிற நிலைமை ஏற்படுகிறது. ஆகவே நிதி வசதி ஏற்படும்போது அதுபற்றிக் கவனிக்கலாம்.

## தேசிய மாணவர் படை செலவில் மத்திய அரசின் பங்கு

*264 வினா—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு கல்வி, சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) என்.சி.சி. மாணவர்களுக்காக செலவழிக்கப்படும் தொகையில் மத்திய அரசு பங்கேற்கிறதா?

(இ) ஆம் எனில், அதன் விபரம் என்ன?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: (அ) ஆம்.

(இ) இந்திய அரசு இராணுவ அதிகாரிகள், போதகர்கள், படைக் கருவிகள், வெடிமருந்துகள், மாணவர்கள் சீருடை, இளநிலைப் பகுதி (ஆண், பெண்) அதிகாரிகள் சீருடை, இராணுவ ஊர்திகள், பயிற்சிச் சாதனங்கள் ஆகியவற்றைத் தருகிறது. பயிற்சி முகாமுக்கு ஏற்படும் செலவில் 50 சத விதத்தையும் மத்திய அரசு மாநில அரசுக்கு ஈடு செய்கிறது.

திரு. என். கிட்டப்பா: தமிழ்நாட்டில் என்.சி.சி. மாணவர்களுக்காக செலவழிக்கப்படும் முழுத் தொகையையும் மத்திய அரசிடம் கோரிப் பெற நமது தமிழக அரசாங்கம் முன்வருமா?